©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 2] CHENNAI, WEDNESDAY, JANUARY 8, 2020
Margazhi 23, Vikari, Thiruvalluvar Aandu–2050

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | Pages. |
|---|---|
| HOME DEPARTMENT | |
| Motor Vehicles Act.—Constitution of Newly Constituted Sub-Courts and Districts Courts as Motor Accidents Claims Tribunals .. .. | 8-9 |
| HOME DEPARTMENT (SC) | |
| Award of the Tamil Nadu Chief Minister's Police Medal for Gallantry Outstanding Devotion to Duty on the Occasion of Dr. Anna's Birthday on 15th September 2019. | |
| Erratum to Notification .. .. .. | 9 |
| தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | |
| Industrial Tribunal for Adjudication. | 9-10 |
| Labour Courts for Adjudication. | 10-17 |



D.T.P.—II-2 (2)—1

## NOTIFICATIONS BY GOVERNMENT

HOME DEPARTMENT

**Constitution of Newly Constituted Sub-courts and Districts Courts as Motor Accidents Claims Tribunals under the Motor Vehicles Act.**

*[G.O. Ms. No. 698, Home (Transport.IV), 11th December 2019, கார்த்திகை 25, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/HO/14/2020.—In exercise of the powers conferred by sub-sections (1) and (2) of Section 165 of the Motor Vehicles Act, 1988 (Central Act 59 of 1988), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Home Department Notification No.II(2)/HO/695/2016, published at pages 617 to 628 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 26th October 2016, namely:-

AMENDMENTS.

In the said Notification, in the Table,-

(1) in columns (4) and (5) against serial number 2 in column (1) and the area "(i) Ariyalur" in column (3), for the entries "(d) Sub-Court, Ariyalur" and "Sub Judge, Ariyalur", the following entries shall, respectively, be substituted, namely:-

| | |
|---|---|
| "(d) Principal Sub Court, Ariyalur. | Principal Sub Judge, Ariyalur. |
| (e) Additional Sub Court, Ariyalur. | Additional Sub Judge, Ariyalur."; |

(2) in columns (4) and (5) against serial number 5 in column (1) and the area "(i) Dharmapuri" in column (3), for the entries "(d) Sub-Court Dharmapuri" and "Sub Judge, Dharmapuri", the following entries shall, respectively, be substituted, namely:-

| | |
|---|---|
| "(d) Principal Sub Court, Dharmapuri. | Principal Sub Judge, Dharmapuri. |
| (e) Additional Sub Court, Dharmapuri. | Additional Sub Judge, Dharmapuri."; |

(3) in columns (4) and (5) against serial number 8 in column (1) and the area "(ii) Kancheepuram" in column (3), for the entries "(b) Sub-Court, Kancheepuram" and "Sub Judge, Kancheepuram", the following entries shall, respectively, be substituted, namely:-

| | |
|---|---|
| "(b) Principal Sub Court, Kancheepuram. | Principal Sub Judge, Kancheepuram. |
| (c) Additional Sub Court, Kancheepuram. | Additional Sub Judge, Kancheepuram."; |

(4) in columns (4) and (5) against serial number 9 in column (1) and the area "(ii) Padmanabhapuram" in column (3), for the entries "Sub-Court, Padmanabhapuram" and "Sub Judge, Padmanabhapuram", the following entries shall, respectively, be substituted, namely:-

| | |
|---|---|
| "(a) Additional District Court, Padmanabhapuram. | Additional District Judge, Padmanabhapuram. |
| (b) Sub Court, Padmanabhapuram. | Sub Judge, Padmanabhapuram."; |

(5) in columns (4) and (5) against serial number 11 in column (1) and the area "(ii) Hosur" in column (3), for the entries "(b) Sub-Court Hosur" and "Sub Judge, Hosur", the following entries shall, respectively, be substituted, namely:-

| | |
|---|---|
| "(b) Principal Sub Court, Hosur. | Principal Sub Judge, Hosur. |
| (c) Additional Sub Court, Hosur. | Additional Sub Judge, Hosur."; |

(6) in columns (3), (4) and (5) against serial number 12 in column (1), after the entry "(ii) Tirumangalam" in column (3) and the corresponding entries relating thereto in columns (4) and (5), the following entries shall, respectively, be inserted, namely:-

| | | |
|---|---|---|
| "(iii) Usilampatti | Sub Court, Usilampatti. | Sub Judge, Usilampatti. |
| (iv) Melur | Sub Court, Melur. | Sub Judge, Melur."; |

(7) for the entries in columns (4) and (5) against serial number 13 in column (1) and the area "(ii) Mayiladuthurai" in column (3), the following entries shall, respectively, be substituted, namely:-

| | |
|---|---|
| "(a) Additional District Court, Mayiladuthurai. | Additional District Judge, Mayiladuthurai. |
| (b) Principal Sub Court, Mayiladuthurai. | Principal Sub Judge, Mayiladuthurai. |
| (c) Additional Sub Court, Mayiladuthurai. | Additional Sub Judge, Mayiladuthurai."; |

(8) (a) for the entries in columns (4) and (5) against serial number 20 in column (1) and the area "(i) Sivagangai" in column (3), the following entries shall, respectively, be substituted, namely:-

| | |
|---|---|
| "(a) Principal District Court, Sivagangai. | Principal District Judge, Sivagangai. |
| (b) Additional District Court, Sivagangai. | Additional District Judge, Sivagangai. |
| (c) Court of Chief Judicial Magistrate, Sivagangai | Chief Judicial Magistrate, Sivagangai. |
| (d) Sub Court, Sivagangai. | Sub Judge, Sivagangai." |

(b) in columns (3), (4) and (5) against serial number 20 in column (1), after the entry "(ii) Devakottai" in column (3) and the corresponding entries relating thereto in columns (4) and (5), the following entries shall, respectively, be inserted, namely:-

| | | |
|---|---|---|
| "(iii) Manamadurai | Sub Court, Manamadurai. | Sub Judge, Manamadurai.". |

S.K. PRABAKAR,
*Additional Chief Secretary to Government.*

HOME DEPARTMENT
(S.C)

**Award of the Tamil Nadu Chief Minister's Police Medal for Gallantry/Outstanding Devotion to Duty on the Occasion of Dr. Anna's Birthday on 15th September 2019.**

**Erratum to Notification**

*[Letter No. HSC3/173-4/2019, Home (SC), 19th December 2019]*

The following Erratum is issued to the Notification No.II(2)/HO/778/2019 is published at Page No. 793-794, in Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette,* Issue No. 40, dated 2nd October 2019 is relating to G.O.Ms.No. 482, Home (SC), 14th September 2019, ஆவணி **28**, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு**–2050.**

| *Page No. in the Gazette/ Sl.No.* | *Erratum* | |
|---|---|---|
| | Published as | To be Read as |
| 793/74 | Thiru V. Velmurugan, Special Sub-Inspector of Police, Tamil Nadu Police Academy, Chennai | Thiru **K.** Velmurugan, Special Sub-Inspector of Police, Tamil Nadu Police Academy, Chennai |
| 794/93 | Thiru S. Thanabalan, Head Constable 1079, Tamil Nadu Commando Forec, Chennai | Thiru S. Thanabalan, Head Constable 1079, Tamil Nadu Commando **Force,** Chennai |

M. MURUGAN,
*SC Joint Secretary to Government.*

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**Disputes between Workmen and Managements referred to Industrial Tribunal for Adjudication.**

**விழுப்புரம் வர்த்தக சங்கம், விழுப்புரம்.**

*[அரசாணை (டி) எண் **665**, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு **(பி2)**த் துறை, **22** நவம்பர் **2019**, கார்த்திகை **6**, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு**–2050.]***

No.II(2)/LE/15/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, விழுப்புரம் வர்த்தக சங்கம், விழுப்புரம் என்ற நிர்வாகத்திற்கும், விழுப்புரம் மாவட்ட சுமைப்பணி தொழிலாளர்கள் சங்கம், விழுப்புரம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழில்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947) 10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற் தீர்ப்பாயத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

விழுப்புரம் நகர சுமைப்பணி தொழிலாளர்களுக்கு கடந்த எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக கூலி உயர்வு அளிக்கப்படவில்லை என்பதால், அத்தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கூலி உயர்வு தொகையினை நிர்ணயித்து, அக்கூலி உயர்வு தொகை எந்த தேதியிலிருந்து எத்தனை ஆண்டுகளுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை நிர்ணயித்து உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

மேலும், விழுப்புரம் மாவட்ட சுமைப்பணி தொழிலாளர்கள் சங்கம், பட்டியலில் கண்டவாறு கூலி உயர்வு வழங்க கோரும் கோரிக்கை நியாயமானது தானா?

**சுமைப்பணி கூலி விபரம்**

| *வ. எண்* | *பொருட்கள்* | *செஞ்சி தற்போது ரூ* | *விழுப்புரம் தற்போது ரூ* | *கோரிக்கை* |
|---|---|---|---|---|
| **1.** | உப்பு மளிகை (100கி) மூட்டை ஒன்றுக்கு | 10 | 10 | 20 |
| **2.** | உப்பு மளிகை (50கி) மூட்டை ஒன்றுக்கு | 6 | 3 | 9 |
| **3.** | எண்ணெய் பேரல் ஒன்றுக்கு | 20 | 20 | 40 |
| **4.** | எண்ணெய் டின் | 3 | 2.50 | 6 |
| **5.** | ஆயில் பெட்டி | 2 | 1.50 | 5 |
| **6.** | வெல்லம் 30கி மூட்டை ஒன்றுக்கு | 4 | 3 | 8 |
| **7.** | மாட்டுத் தீவனம் மூட்டை ஒன்றுக்கு | 6 | 3 | 10 |
| **8.** | உப்பு டன் ஒன்றுக்கு | 80 | | 150 |
| **9.** | போரா டீ பேன்சி ஒன்று | 18 | | 30 |
| **10.** | நோட்டிக் பண்டல் | 12 | 7 | 22 |
| **11.** | பட்டாசு பண்டல் | 20 | 10 | 30 |

| வ. எண் | பொருட்கள் | செஞ்சி தற்போது ரூ | விழுப்புரம் தற்போது ரூ | கோரிக்கை |
|---|---|---|---|---|
| 12. | செப்பல் பண்டல் | 12 | | 25 |
| 13. | ஜவுளி பண்டல் சிறியது | 13 | 10 | 25 |
| 14. | ஜவுளி பண்டல் பெரியது | 17 | 10 | 30 |
| 15. | சோப்பு அட்டை | 2.50 | 2.80 | 5 |
| 16. | தண்ணீர் மூட்டை ஒன்றுக்கு | 2.50 | 2.00 | 5 |
| 17. | அரிசி 25கி சிப்பம் | 4.00 | 1.50 | 6 |
| 18. | பிஸ்கட் பெட்டிக்கு | 2.00 | 2.00 | 5 |
| 19. | கிரைண்டர் | 18.00 | 10.00 | 25 |
| 20. | கட்டில் | 16.00 | 10.00 | 22.00 |
| 21. | பீரோ | 18.00 | 18.00 | 25.00 |
| 22. | சேர் பண்டல் ஒன்று | 18.00 | | 25.00 |
| 23. | சோபா செட் | | 70 | 140 |
| 24. | டிவி பிரிஜ் வாஷிங்மெஷின் | 18.00 | 10.00 | 25.00 |
| 25. | பேன்சி அட்டைப் பொட்டி | 12.00 | 10.00 | 25.00 |
| 26. | உரம் டன் ஒன்றுக்கு | 50.00 | 22.00 | 70.00 |
| 27. | சிமெண்ட் டன் ஒன்றுக்கு | 50.00 | 23.00 | 70.00 |
| 28. | கம்பி டன் ஒன்றுக்கு | 55.00 | 30.00 | 80.00 |
| 29. | சுண்ணாம்பு | | 42.00 | 100.00 |
| 30. | டைல்ஸ் மார்பில்ஸ் டன் ஒன்றுக்கு | | 220.00 | 400.00 |
| 31. | சிமெண்ட் ஷீட் 1க்கு | | 2.00 | 10.00 |
| 32. | பிளைவுட் ஷீட் 1க்கு | | 10.00 | 20.00 |
| 33. | கம்பி ரோல்வேலி 1க்கு | | 10.00 | 50.00 |
| 34. | கலாய் பைப் 1 டன் | | 190.00 | 300 |
| 35. | தகர பைப் 1 டன் | | 2 | 10 |
| 36. | அரிசி மூட்டை 75கி க்கு | | 3.00 | 12.00 |
| 37. | அரிசி மூட்டை 50கி க்கு | | 2.00 | 10.00 |
| 38. | அரிசி மூட்டை 100கி க்கு | | 5.00 | 15.00 |
| 39. | சிலிண்டர் லோடு ஏற்றி இறக்க சிறிய வண்டிக்கு (306) | | 800 | 1500 |
| | டாராஸ் லாரிக்கு (450) | | 1200 | 2250 |
| 40. | ஜெராக்ஸ் பண்டல் | | 5 | 10 |
| 41. | டிஜிட்டல் ரோல் | | 10 | 25 |
| 42. | பூச்சி மருந்து பெட்டி | | 5 | 10 |

**Disputes between Workmen and Managements referred to Labour Courts for Adjudication.**

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை.**

*[அரசாணை (டி) எண் 639, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 7 நவம்பர் 2019, ஐப்பசி 21, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/16/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிர்வாகத்திற்கும், அரசு போக்குவரத்து மதுரை தொழிலாளர் சங்கம் (CITU), மதுரை என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. V. இளங்கோவன், ஓட்டுநருக்கு (பணி எண் DR 8056), வருடாந்திர ஊதிய உயர்வை ஒரு வருட காலத்திற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து, நிர்வாகம் வழங்கிய 08–01–2009 நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 669, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 25 நவம்பர் 2019, கார்த்திகை 9, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/17/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தேசிய தொழிலாளர் சங்கம் (INTUC), மதுரை என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. I. செல்லம், ஓட்டுநருக்கு (பணி எண் DR 14532), வருடாந்திர ஊதிய உயர்வை ஓராண்டு காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து, நிர்வாகம் வழங்கிய 17–05–2016 நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 670, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 25 நவம்பர் 2019, கார்த்திகை 9, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/18/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிர்வாகத்திற்கும், அரசு போக்குவரத்து மதுரை தொழிலாளர் சங்கம் (CITU), மதுரை என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. K.P. சண்முகவேல், நடத்துநருக்கு (பணி எண் CR 11317), வருடாந்திர ஊதிய உயர்வை 18 மாத காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து, நிர்வாகம் வழங்கிய 23–05–2016 நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 671, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 25 நவம்பர் 2019, கார்த்திகை 9, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/19/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தேசிய தொழிலாளர் சங்கம் (INTUC), மதுரை என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. M. பெரியகருப்பன், நடத்துநருக்கு (பணி எண் CR 07589), வருடாந்திர ஊதிய உயர்வை 2 வருட காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து, நிர்வாகம் வழங்கிய 07–09–2013 நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 676, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 26 நவம்பர் 2019, கார்த்திகை 10, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/20/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தேசிய தொழிலாளர் சங்கம் (INTUC), மதுரை என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. M. ஆரோக்கியசாமி, நடத்துநருக்கு (பணி எண் CR 14169), வருடாந்திர ஊதிய உயர்வை 2 வருட காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து, நிர்வாகம் வழங்கிய 25–04–2016 நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 681, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 26 நவம்பர் 2019, கார்த்திகை 10, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/21/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிர்வாகத்திற்கும், அரசு போக்குவரத்து மதுரை தொழிலாளர் சங்கம் (CITU), மதுரை என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு மதுரை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

நிர்வாகம் மற்றும் தொழிற் சங்கம் இடையே ஏற்படுத்தப்பட்ட **12(3)** ஒப்பந்தத்திற்கு மாறாக, திரு. T. சரவணன், நடத்துநரிடமிருந்து (ப.எண் **83006**), திருடுபோன பயன்படுத்தப்படாத டிக்கெட் புத்தகங்களுக்கான தொகையாக, நிர்வாகத்தால் பெறப்பட்ட ரூ.**5,300/—**ஐ திரும்ப வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா**?**

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 686, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 27 நவம்பர் 2019, கார்த்திகை 11, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு—2050.]*

No.II(2)/LE/22/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தேசிய தொழிலாளர் சங்கம் (INTUC), மதுரை என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947**) **10(1)**(c) பிரிவிலும், **10(1)**(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. P. திருமலை, ஓட்டுநருக்கு (ப. எண் DR **9984**), வருடாந்திர ஊதிய உயர்வை இரண்டு வருட காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து, நிர்வாகம் வழங்கிய **19—11—2014** நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா**?**

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிமிடெட், திண்டுக்கல் மண்டலம்.**

*[அரசாணை (டி) எண் 649, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 9 நவம்பர் 2019, ஐப்பசி 23, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு—2050.]*

No.II(2)/LE/23/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை லிமிடெட், திண்டுக்கல் மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் RMTC, ஒர்க்கர்ஸ் யூனியன் (ஏஐடியுசி) திண்டுக்கல் என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947**) **10(1)**(c) பிரிவிலும், **10(1)**(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. J. ராஜா, ஓட்டுநருக்கு (பணி எண் **51392**), வருடாந்திர ஊதிய உயர்வினை மூன்று **(3)** வருட காலத்திற்கு திரண்ட பயன்களுடன் நிறுத்தம் செய்து நிர்வாகம் வழங்கிய **27—11—2014** நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா**?** ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 678, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 26 நவம்பர் 2019, கார்த்திகை 10, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு—2050.]*

No.II(2)/LE/24/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூவேந்தர் முன்னணிக் கழக தொழிலாளர் சங்கம், திண்டுக்கல் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947**) **10(1)**(c) பிரிவிலும், **10(1)**(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. P. ஒண்டிவீரன், ஓட்டுநருக்கு (பணி எண் **55438**), நிர்வாகம் வழங்கிய வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயன்களுடன் பதினெட்டு **(18)** மாதங்களுக்கு நிறுத்தம் செய்து இது சம்பந்தமான பணப்பலன்கள் ஏதேனும் இருப்பின் அது பின்னிட்டு வழங்கப்படமாட்டாது (Without monetary Benefit) என்ற **31—05—2017** நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா**?** ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 687, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 27 நவம்பர் 2019, கார்த்திகை 11, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு—2050.]*

No.II(2)/LE/25/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை லிமிடெட், திண்டுக்கல் மண்டலம்

என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் RMTC, ஒர்க்கர்ஸ் யூனியன் (ஏஐடியுசி) திண்டுக்கல் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947—**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947) 10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறை திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. V. கணேசன், ஓட்டுநருக்கு (பணி எண் **52281**), வருடாந்திர ஊதிய உயர்வினை ஐந்து வருட காலத்திற்கு அதன் திரண்ட பயன்களுடன் நிறுத்தம் செய்து நிர்வாகம் வழங்கிய **23—07—2015** நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**பெர்ஃபெட்டி வான்மேலா இந்தியா பிரைவேட் லிமிடெட்,**

*[அரசாணை (டி) எண் 701, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 2 டிசம்பர் 2019, கார்த்திகை 16, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு—2050.]*

No.II(2)/LE/26/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்டம், காரணப்புதுச்சேரி கிராமத்தில் இயங்கி வரும் பெர்ஃபெட்டி வான்மேலா இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் பெர்ஃபெட்டி வான்மேலா தொழிலாளர் மையம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947—**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947) 10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

நிர்வாகத்தால் பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் திரு. K. ஜானகிராமன், திரு. V. வேணுகோபால், திரு. M. சேட்டு மற்றும் திரு. B. ரமேஷ் ஆகியோருக்கு மீண்டும் தொடர் சர்வீஸுடன் வேலையும், வேலையிழந்த நாட்களுக்கு முழு ஊதியமும் கிடைக்க ஆவன செய்யுமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**பெடர்ஸ் எலக்ட்ரிக் அண்டு இன்ஜினியரிங் லிமிடெட், நெல்லிக்குப்பம், வேலூர் மாவட்டம்**

*[அரசாணை (டி) எண் 703, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 2 டிசம்பர் 2019, கார்த்திகை 16, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு—2050.]*

No.II(2)/LE/27/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, பெடர்ஸ் எலக்ட்ரிக் அண்டு இன்ஜினியரிங் லிமிடெட், நெல்லிக்குப்பம், வேலூர் மாவட்டம் என்ற நிர்வாகத்திற்கும், ஐவர் குழு (CITU ஆதரவு), பெடர்ஸ் எலக்ட்ரிக் அண்டு இன்ஜினியரிங் லிமிடெட் தொழிலாளர்கள், நெல்லிக்குப்பம், வேலூர் மாவட்டம் என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை, தொழிலார் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947) 10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற் தகராறு இணைப்பில் காணும் எழுவினாக்களுடன், வேலூர், தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, வேலூர், தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண் 1**

தற்போது வழங்கி வரும் சம்பளத்தில் ரூ.**5000/—**உயர்த்தி வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண் 2**

விலைவாசி புள்ளிகளுக்கு ஏற்ப அகவிலைப்படி தனியே வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண் 3**

ஆண்டுக்கு 2 செட் தரமான சீருடை தைத்து வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண் 7**

இரவு ஷிப்ட் செய்யும் தொழிலாளர்கள் அனைவருக்கும் நாள் ஒன்றுக்கு ரூ.**50/—** வீதம் கணக்கிட்டு இரவு ஷிப்ட் அலவன்சாக வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல்**

*[அரசாணை (டி) எண் 713, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 4 டிசம்பர் 2019, கார்த்திகை 18, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/28/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், பொதுச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் RMTC ஒர்க்கர்ஸ் யூனியன், ஏஐடியுசி, திண்டுக்கல் என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறை திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. என். ராமானுஜம், நடத்துநர் (பணி எண் **62270)** என்பவருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை ஆறு **(6)** மாத காலத்திற்கு அதன் திரண்ட பயன்களுடன் நிறுத்தம் செய்து நிர்வாகம் வழங்கிய **24–09–2004** நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 714, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 4 டிசம்பர் 2019, கார்த்திகை 18, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/29/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திருக்கும், பொதுச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் RMTC ஒர்க்கர்ஸ் யூனியன், ஏஐடியுசி, திண்டுக்கல் என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறை திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. N. விஜயராகவன், தினக்கூலி நடத்துநர் (பணி எண் **66094)** என்பவருக்கு தினக்கூலி பணிக்காலத்தை இரண்டு வருட காலத்திற்கு நீடிப்பு செய்து நிர்வாகம் வழங்கிய **19–05–2017** நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 722, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 9 டிசம்பர் 2019, கார்த்திகை 23, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/30/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், பொதுச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் RMTC ஒர்க்கர்ஸ் யூனியன் & ஏஐடியுசி திண்டுக்கல் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற் தீர்ப்பாயத்திடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. P. குமரேசன், சேம ஓட்டுநருக்கு (பணி எண். **95945),** தின்க்கூலி பணிக்காலத்தை இரண்டு **(2)** வருட காலத்திற்கு நீடிப்பு செய்து நிர்வாகம் வழங்கிய **10–06–2016** நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 734, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 12 டிசம்பர் 2019, கார்த்திகை 26, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/31/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், RMTC ஒர்க்கர்ஸ் யூனியன், ஏஐடியுசி, திண்டுக்கல் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து

மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. K. சுரேஷ், சேம ஓட்டுநருக்கு (பணி எண். 95016), தினக்கூலி பணிக்காலத்தை இரண்டு (2) வருட காலத்திற்கு நீடிப்பு செய்து நிர்வாகம் வழங்கிய 30–08–2017 நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 737, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 12 டிசம்பர் 2019, கார்த்திகை 26, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/32/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் RMTC ஒர்க்கர்ஸ் யூனியன், ஏஐடியுசி திண்டுக்கல் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. K. செந்தில்குமார், ஓட்டுநருக்கு (பணி எண். 56362), தினக்கூலி பணிக்காலத்தை இரண்டு (2) வருடங்கள் நீடிப்பு செய்து நிர்வாகம் வழங்கிய 10–02–2016 நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் கோட்டம், திருச்சிராப்பள்ளி.**

*[அரசாணை (டி) எண் 717, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 6 டிசம்பர் 2019, கார்த்திகை 20, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/33/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, நிர்வாகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் கோட்டம், திருச்சிராப்பள்ளி என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் சங்கம், திருச்சிராப்பள்ளி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழில்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

**கோரிக்கை எண். 1**

திரு. M. சகாயஜோசப் ராஜ், (பணி எண். 1355 TE Level 5) என்பவருக்கு வருடாந்திர ஊதிய உயர்வை மூன்று மாத காலத்திற்கு கூட்டு விளைவுடன் தள்ளி வைத்து நிர்வாகம் வழங்கிய 21–08–2017 நாளிட்ட தண்டனையை இரத்து செய்ய வேண்டும் மற்றும் கிடைக்க வேண்டிய பணபலன்களை முறையாக கணக்கிட்டு வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 2**

திரு. M. சகாயஜோசப் ராஜ், (பணி எண். 1355 TE Level 5) என்பவருக்கு வருடாந்திர ஊதிய உயர்வை ஆறு மாத காலத்திற்கு கூட்டு விளைவுடன் தள்ளி வைத்து நிர்வாகம் வழங்கிய 23–11–2017 நாளிட்ட தண்டனையை இரத்து செய்ய வேண்டும் மற்றும் கிடைக்க வேண்டிய பணபலன்களை முறையாக கணக்கிட்டு வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 3**

திரு. M. சகாயஜோசப் ராஜ், (பணி எண். 1355 TE Level 5) என்பவருக்கு வருடாந்திர ஊதிய உயர்வை ஆறு மாத காலத்திற்கு கூட்டு விளைவுடன் தள்ளி வைத்து நிர்வாகம் வழங்கிய 22–02–2018 நாளிட்ட தண்டனையை இரத்து செய்ய வேண்டும் மற்றும் கிடைக்க வேண்டிய பணபலன்களை முறையாக கணக்கிட்டு வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை.**

*[அரசாணை (டி) எண் 727, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 10 டிசம்பர் 2019, கார்த்திகை 24, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/34/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை என்ற நிர்வாகத்திற்கும் அரவிந்த் கெஜ்ரிவால் தமிழ்நாடு ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன், மதுரை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. M. ஈஸ்வரன் (பணி எண். C 21586) நடத்துனருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை 3 வருடங்கள் பின்தொடர்ச்சியுடன் தள்ளி வைத்து நிர்வாகம் பிறப்பித்த 09–05–2014 நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 748, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 16 டிசம்பர் 2019, கார்த்திகை 30, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/35/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை என்ற நிர்வாகத்திற்கும், நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள் பாதுகாப்பு தொழிற்சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. E. வேலு, (பணி எண். 13220) நடத்துனருக்கு முறையாக 01–11–2010 அன்று போடப்படவேண்டிய III-ம் கட்ட ஆய்வுப் பலன்களை (Review) வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**ஜெ.பி. ரசாயனங்கள் (ம) மருந்துகள் நிறுவனம் (J.B. Chemicals & Pharmaceuticals Ltd., Coimbatore) கோவை.**

*[அரசாணை (டி) எண் 729, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 11 டிசம்பர் 2019, கார்த்திகை 25, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/36/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, ஜெ.பி. ரசாயனங்கள் (ம) மருந்துகள் நிறுவனம் (J.B. Chemicals & Pharmaceuticals Ltd., Coimbatore) கோவை என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு மருத்துவம் (ம) விற்பனை பிரதிநிதிகள் சங்கம் (Tamil Nadu Medicals Sales Representatives Association Trichy Unit, Trichy) திருச்சி என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

மனுதாரர் சங்க உறுப்பினர் திரு. M. ராஜகோபால் என்பவரை பழிவாங்கும் நோக்கில் நிர்வாகத்தால் வழங்கப்பட்ட பணியிடமாற்ற ஆணையை இரத்து செய்ய கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆமெனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில்.**

*[அரசாணை (டி) எண் 735, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 12 டிசம்பர் 2019, கார்த்திகை 26, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/37/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் (LPF), நாகர்கோவில் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. A. அற்புத செல்வன், நடத்துனர் (பணி எண். 10447) இழந்திருக்கும் ஆண்டு ஊதிய உயர்வுகளை வழங்கவும் மற்றும் ஊதியத்திலிருந்து ஏற்கெனவே பிடித்தம் செய்து வந்த GPF சந்தாவுக்கு பதில் CPS சந்தாவாக தற்போதைய நிர்வாகம் பதிவு செய்துள்ளதை மாற்றி 01–04–2003க்கு முன்பாக அமுலில் இருந்த பழைய ஓய்வூதிய திட்டத்திலேயே தொடர அனுமதிக்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 736, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 12 டிசம்பர் 2019, கார்த்திகை 26, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/38/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் (LPF), நாகர்கோவில் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947**) **10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. M. பீட்டர் ஜெரோம், நடத்துனர் (பணி எண். **4857**) இழந்திருக்கும் ஆண்டு ஊதிய உயர்வுகளை வழங்கவும் மற்றும் இவர் ஊதியத்திலிருந்து ஏற்கெனவே பிடித்தம் செய்து வந்த GPF சந்தாவுக்கு பதில் CPS சந்தாவாக தற்போதைய நிர்வாகம் பதிவு செய்துள்ளதை மாற்றி **01–04–2003**க்கு முன்பாக நடைமுறையில் இருந்த பழைய ஓய்வூதிய திட்டத்திலேயே தொடர அனுமதிக்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம், சின்கோனா, வால்பாறை.**

*[அரசாணை (டி) எண் 749, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 16 டிசம்பர் 2019, கார்த்திகை 30, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/39/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம், சின்கோனா, வால்பாறை என்ற நிர்வாகத்திற்கும், ஆனைமலை ஒர்க்கர்ஸ் யூனியன், வால்பாறை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947**) **10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

வால்பாறை, தமிழ்நாடு தேயிலை தோட்ட கழக நிர்வாகம், திருமதி. சண்முகத்தாய் என்பவருக்கு மேற்பார்வையாளருக்கான பயிற்சி வழங்கி மேற்பார்வையாளராக பணிபுரிய உத்தரவிட வேண்டுமென கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**முகமது நசிமுத்தின்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU